**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 34/2023**

**Date :17.03.2026**

**பி. வா.சா1-ராமசுவாமி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் என்ன படிப்பு படித்துள்ளேன் என்றால் M.Com., B.ed. நான் வெள்ளையன் தோப்பில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வெள்ளையன் தோப்பு ஊரில் நான் வரிகாரரா என்றால் இல்லை. நான் ஐயா வைகுண்டர் வழிபாட்டை பின்பற்றக்கூடிய நபரா என்றால் இல்லை. ஆனால் எனது மூதாதையர்கள் ஐயா வைகுண்டர் வழிபாட்டை பின்பற்றினார்கள் என்றால் சரிதான். நான் எந்த வழிபாட்டை பின்பற்றுகிறேன் என்றால் இந்து மத வழிபாடு. நான் ஐயா வைகுண்டர் வழிபாட்டை பின்பற்றாததற்கான ஏதேனும் காரணங்கள் உண்டா என்றால் இல்லை. ஐயா வைகுண்டர் வழிபாட்டையும் மேற்கொள்வேன்.

எனது மூதாதையர்கள் ஐயா வைகுண்டர் வழிபாட்டை பின்பற்றிய போது நான் ஐயா வைகுண்டர் வழிபாட்டை பின்பற்றாததற்கான ஏதேனும் காரணங்கள் உண்டா என்றால் இல்லை. எனது தந்தை ஐயா வைகுண்டர் வழிபாட்டை பின்பற்றுவாரா என்றால் இல்லை. எனது பூட்டனார் அருகுலமாடன் நாடார் 1105 ல் வெள்ளையன் தோப்பு ஊரில் இடம் கொடுத்துதான் முதல் முதலாக ஐயா வைகுண்டர் கோவில் வந்தது. அதற்கான கல்வெட்டுகள் அங்கே உள்ளது என்றால் சரியல்ல. அது எங்கள் குடும்ப கோவிலுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த 2 சென்ட் இடம்.

எனது பூட்டனார் அருகுலமாடன் நாடாரால் ஐயா வைகுண்டர் கோவிலுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மேற்படி 2 சென்ட் இடம் என்றால் சரியல்ல. ஐயா வைகுண்டர்

இடத்தில் தான் எங்கள் குடும்ப கோவிலுக்கான 2 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வெள்ளையன் தோப்பு ஊரில் அனைத்து குடும்பத்தினருக்கும் சுடலைமாடசுவாமி கோவிலிற்கும் என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கு குல தெய்வமாக சுடலைமாடசுவாமி கோவில் உள்ளது என்றால் சரிதான்.

பொதுவாக சுடலைமாடன் சுவாமி கோவிலில் கொடை நடத்தும் சமயத்தில் ஐயா வழி கோவிலில் பூஜை வைத்துவிட்டுதான் சுடலைமாடன் சுவாமி கோவிலிற்கு வருவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சுடலைமாடன் சுவாமி கோவிலில் கொடை நடத்தும் சமயத்தில் ஐயா வழி கோவிலில் பூஜை வைத்துவிட்டுதான் சுடலைமாடன் சுவாமி கோவிலிற்கு வருவார்கள் என்றால் சரியல்ல. ஐயா வைகுண்டர் சுவாமி கோவிலில் நான் வரிக்காரராக இல்லை என்பதால் மேற்படி ஐயா வைகுண்டர் சுவாமி கோவிலில் இருக்கும் சடங்குகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ஐயா வைகுண்டபதியில் எத்தனை வாகனங்கள் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஐயா வைகுண்டபதியில் 10 வாகனங்கள் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எங்கள் ஊரில் அனைவரும் வரிக்காரர்களாக இருக்கும்போது நான் மட்டும் வரிக்காரராக இல்லாததற்கு என்ன காரணம் என்றால் எனது தந்தையின் ஊர் இடையன்விளை வெள்ளையன் தோப்பு எனது பாட்டியின் ஊர் என்பதால் நான் வரிக்காரராக இல்லை. ஆகையால், மேற்படி ஊரில் எத்தனை வரிக்காரர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு 3 சகோதரிகள் என்றால் சரிதான். எனது 3 சகோதரிகளின் திருமணங்கள் உத்தேசமாக எந்தெந்த ஆண்டுகள் நடைபெற்றது என்றால் மூத்த சகோதரிக்கு 1993, 2ம்

சகோதரி ஞாபகம் இல்லை, 3 ம் சகோதரிக்கு 1999. எனது தந்தை என்ன வேலை செய்து வந்தார் என்றால் மாவட்ட கல்வி அலுவலராக இருந்து ஓய்வு பெற்றார். 1980 ஆம் ஆண்டு எனது தந்தை எங்கு வேலை செய்து வந்தார் என்றால் அரசு மேல் நிலைப்பள்ளி இடலாக்குடியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். எனது தாத்தா பொன்னுசாமி நாடாருக்கு ராமு நாடாச்சி என்ற மனைவியும் நாடாச்சி தங்கம் மற்றும் நேச பாண்டிய நாடாச்சி என்ற மகள்களும் உண்டு என்றால் சரிதான்.

எனது தாத்தா பொன்னுசாமி நாடார் இறந்தபின்பு எனது பாட்டி ராமுநாடாச்சி 1974 ல் பாக பிரிவினை செய்தார் என்றால் சரிதான். ராமு நாடாச்சி மற்றும் நாடாச்சி தங்கம் மற்றும் நேச பாண்டிய நாடாச்சி என்ற 2 மகள்களும் சேர்ந்து பாக பிரிவினை செய்தார்கள். மேற்படி பாக பிரிவினைக்கு முன்பே எனது தாய் நாடாச்சி தங்கத்திற்க்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். பாக பிரிவினைக்கு பின்பு எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினை படி எனது அம்மாவிற்கு தென்மேற்காக உள்ள இடமும் சித்திக்கு தென்கிழக்காக உள்ள இடமும் 12 ¼ சென்ட் வீதமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி பாகபிரிவினை படி சர்வே எண் 562/7 சொத்து மட்டும் தான் இவ்வழக்கு சம்மந்தமான சொத்து என்றால் சரிதான். எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1974. மாதம் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சியும் எனது பாட்டி ராமு நாடாச்சியும் சேர்ந்து வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் வசித்து வந்தோம். சித்தி நேச பாண்டிய நாடாச்சி திருமணத்திற்கு பின்பு அவருடைய கணவர் செல்லத்துரை வீட்டிற்கு சென்று விட்டார் அங்கு தான் தாமசித்து வந்தார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு

அவருடைய கணவர் செல்லத்துரை வீட்டில் உத்தேசமாக 6 மாதங்கள் இருந்து விட்டு எனது வீட்டிற்கு வந்து விட்டார். எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சி திருமணத்திற்கு பின்பு அவருடைய கணவர் செல்லத்துரை வீட்டிற்கு சென்று விட்டு சுமார் 6 வருடங்களாக அங்கு தான் மகிழ்ச்சியாக தாமசித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சி திருமணம் நடைபெற்ற போது எனக்கு எத்தனை வயது என்றால் 8 வயது. மேற்படி சங்கதிகள் நடந்த சமயத்தில் எனக்கு சிறு வயது என்பதால் எனக்கு மேற்படி விவரங்கள் குறித்து தெரியாது என்றால் சரியல்ல.

நான் எனது முதல் விசாரணையில் எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கும் அவரது கணவர் செல்லத்துரைக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு அவர் எங்கள் வீட்டில் வந்து இருந்ததாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கும் அவரது கணவர் செல்லத்துரைக்கும் நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து முறையாக விவாகரத்து நடைபெற்றது. மேற்படி விவாகரத்தில் எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கும் அவரது கணவர் செல்லத்துரைக்கும் நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து முறையாக விவாகரத்து நடைபெற்றதாக போலியான நபர்களை வைத்து ஆள் மாறாட்டம் செய்து போலியான பிரிவினை பத்திரம் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

எனது சித்தியின் கணவர் செல்லத்துரை அன்றைய தினம் நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் நாடார் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் சமூகம் தமிழ்நாட்டில் அதிகப்படியான ஆட்கள் இருக்கும் சமூகம் என்றால் சரியல்ல. எங்கள் சமுதாய சட்டத்தின்

படி நாங்கள் நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து பெற்றால் தான் அது செல்லக்கூடியது என்றால் சரியல்ல. சார்பதிவாளருக்கு விவாகரத்து செய்யக்கூடிய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விவாகரத்திற்கு பின்பு செல்லத்துரை மறுமணம் செய்து கொண்டாரா இல்லை முன்பாக செய்து கொண்டாரா என்றால் விவாகரத்து முன்பு.

எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கும் செல்லத்துரைக்கும் குழந்தை இல்லாத காரணத்தினால் நேச பாண்டிய நாடாச்சியின் அனுமதியுடன் தான் மறுமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. மறுமணத்திற்கு பின்பும் செல்லத்துரை நேச பாண்டிய நாடாச்சியை நன்கு கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கும் செல்லத்துரைக்கும் குழந்தை இல்லாத காரணத்தினால் அவர்களின் சொத்து மீது எனக்கு மோகம் இருந்தது என்றால் சரியல்ல. எனது சித்தி நேச பாண்டிய நாடாச்சிக்கும் செல்லத்துரைக்கும் குழந்தை இல்லாத காரணத்தினால் அவர்களின் சொத்து மீது எனக்கு மோகம் இருந்ததால் நேச பாண்டிய நாடாச்சியின் சொத்தினை எழுதி வாங்க வேண்டி எனது பாட்டியை வற்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல.

எனது மற்றும் இதர பிரதிவாதிகளான எனது தந்தை மற்றும் சகோதரிகளின் தொடர் வற்புறுத்தலால் எனது பாட்டி ராமு நாடாச்சி மர்மமான முறையில் காணாமல் போய்விட்டார் என்றால் சரியல்ல. எனது பாட்டி தற்போது எங்கு உள்ளார் என்றால் காலம் சென்று விட்டார். எனது பாட்டியின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பாட்டி இறந்து விட்டாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் எனது பாட்டி தீடிரென்று காணாமல் போய் விட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

நான் நாகர்கோவில் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 151/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்ய வேண்டி தாசில்தார் முன்பாக நான் இறப்பு சான்றிதழ் வேண்டி ஒரு மனு சமர்பித்தேன் என்றால் சரிதான். அவரின் உத்தரவின் பெயரில் தான்மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி தாசில்தார் முன்பாக நான் இறப்பு சான்றிதழ் வேண்டி சமர்பித்த மனுவில் செல்லத்துரை அவர் தான் வாரிசு என்று கோரி பதிலுரை சமர்பித்தார் என்றால் அது குறித்து தெரியவில்லை. மேற்படி செல்லத்துரை கொடுத்த பதிலுரையை பரீசிலித்த பின்பு தாசில்தார் வழக்கு தாக்கல் செய்யக் கோரி பரிந்துரைத்தார் என்றால் சரிதான்.

இவ்வழக்கை பொறுத்தவரை எனக்கும் நேச பாண்டிய நாடாச்சிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நேச பாண்டிய நாடாச்சிக்கு கணவர் இருக்கும் வரை நான் எவ்விதத்திலும் வாரிசாக வரமுடியாது என்றால் சரியல்ல. நேச பாண்டிய நாடாச்சி இறக்கும் வரையிலும் அவரது கணவரால் பராமரிக்கப்பட்டு வந்தார் என்றால் சரியல்ல. வாசாஆ 12 ல் தாசில்தார்ல கொடுத்த உத்தரவில் நேச பாண்டிய நாடாச்சி இறக்கும் வரையிலும் அவரது கணவரால் பராமரிக்கப்பட்டு வந்தார் என்று நேச பாண்டிய நாடாச்சியின் ஈமச் சடங்குகள் அனைத்தும் அவரது கணவரால் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**